டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in
கல்யாண்
ஜுவல்லர்ஸ்
agridoctor.in | 12.02.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 193 - Madurai | Online Edition

# தகுதியுள்ள கிராமப்புற வாழ்விடத்தை மேம்படுத்தும் வகையில் சாலை மேம்பாட்டுத் திட்டம்

புது தில்லி, பிப்.12

வறுமை ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக பிரதமரின் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. கிராமப்புறங்களில் சாலைகள் அமைப்பது மாநில அரசின் வரம்பிற்குள் இருந்த போதிலும் இத்திட்டத்தின் கீழ், மாநில அரசுகளுக்கு, மத்திய அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. இதன்படி, தமிழகம் உட்பட நாடு முழுவதிலும் கிராமப்புற வாழ்விடங்களை மேம்படுத்தும் விதமாக அனைத்து தகுதியுள்ள கிராமப்புற பகுதிகளில் அனைத்துப் பருவ-நிலைகளுக்கும் ஏற்ற சாலைக் கட்டமைப்பு வசதிகள் பிரதமரின் கிராமப்புறச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் நான்காம் கட்டமாக 2024-ம் ஆண்டில் அனைத்து பருவ நிலைகளுக்கும் ஏற்ற வகையில், சாலை வசதிகள் இல்லாத 25,000 கிராமங்களுக்கு அங்குள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ராஜாத்தி எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்துள்ள மத்திய ஊரக மேம் பாட்டுத்துறை இணையமைச்சர் கம்லேஷ் பஸ்வான், பிரதமரின் கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் 4-ம் கட்டத்தின் கீழ், மாநில அரசுகளால் கணக்கீடு செய்யப்பட்டு விண்ணப்பித்துள்ள சாலை வசதியில்லாத தகுதியுடைய கிராமங்களில் சாலை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் பிரதமரின் விரைவு சக்தி இணையதளத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்பட்டு தரவுகள் அனைத்தும் விரிவான முறையில் பகுப்பாய்வு செய்யப் பட்டு முதல்கட்டமாக விரிவான திட்ட அறிக்கைத் தயாரிக்கப் படுகிறது.

இதன் அடிப்படையில் கிராமப்புறங்களில் சாலைக்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்து உள்ளது.

தமிழ்நாட்டில், தர்மபுரி, திண்டுக்கல், சேலம், திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர் ஆகிய 6 மாவட்டங்களில் கிராமப்புறச் சாலை அமைக்கும் திட்டத்தின் கீழ், சாலை வசதியை ஏற்படுத்துவதற்கு தேசிய ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு முகமை அனுமதி வழங்கியுள்ளது.

## விதை பண்ணை ஆய்வு மேற்கொண்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர்



விழுப்புரம், பிப்11

விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் த.பாபு, விக்கிர வாண்டி வட்டாரத்தில் மேற் கொள்ளப்பட்டு வரும் விதை பண்ணைகள் தொடர்பான விதை பண்ணை ஆய்வு மற்றும் குவியலாய்வு ஆய்வினை மேற்கொண்டார், ADT 54 ஆதாரநிலை 2 நெல் விதைவயலில் காணப்படும் பிறரக கலவன்களை அகற்றிட அறிவுறுத்தினார்.

மேலும் குவியலாய்வு ஆய்வில் ஊசு 1009 சான்று நிலை நெல்லில் பிறரக கலவன்கள் உள்ளதா, ஈரப்பதம் உள்ளிட்ட தரங்களை ஆய்வு செய்தார். தொடர்ந்து தரமான விதை உற்பத்தி தொழில்நுட்பங்களை விதை உற்பத்தியாளருக்கு அறிவுரை வழங்கினார். குறிப்பாக அறுவடை இயந்திரம், உலர் கலங்கள், பயிர் விலகுதூரம், தார்பைகள், கோணிபைகள் ஆகியவற்றின் மூலம் பிறரக கலவன் கலக்காமல் பாதுகாப்பது குறித்த விழிப் புணர்வு ஏற்படுத்தி அறிவுறுத்தினார்.

சபாபதி, உதவி விதை அலுவலர் மற்றும் சு,சுஷிதா, விதைச்சான்றளிப்பு அலுவலர் ஆகியோர் ஆய்வில் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரம் அறுவடை பின்சாரத் தொழில்நுட்ப பயிற்சி



அரியலூர், பிப்.11

அரியலூர் மாவட்ட வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண் கலநிலை ஆராய்ச்சி மையம், கோவை மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையம் விருத்தாச்சலம் இணைந்து தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ள வல்ல மாதிரி கிராமங்களை உருவாக்குதல் என்ற தலைப்பின் கீழ் வேளாண் மகளிருக்கான மாற்று வாழ்வாதாரம் அறுவடை பின் சார் தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. பயிற்சியில் முனைவர் ஹரி சுதன் இணைப்பேராசிரியர் உழவியல் வரவேற்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து சாந்தி, வேளாண்மை உதவி இயக்குநர், அரியலூர் வாழ்த்துடைிர வழங்கினார். ராதாகிருஷ்ணன், வேளாண் உதவி இயக்குநர் தரக் கட்டுப்பாடு, அரியலூர், விவசாயிகள் இடையே அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள் குறித்து வரிவாக எடுத்துரைத்தார். ஜெ.உலகம்மை முருகக்கனி, வேளாண்மை இணை இயக்குநர், அரியலூர், விவசாயம் செய்யும் மகளிர்கள் குழுக்களாக இணைந்து மதிப்பு கூட்டு செய்வதன் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் பற்றி விரிவாக சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து முனைவர் பாஸ்கரன் பேராசிரியர் மற்றும் தலைவர் மண்டல ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம், தலைமை உரை ஆற்றி விவசாயிகளிடம் வேளாண் பொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வது மூலம் கிடைக்கப் பெறும் லாபங்கள் பற்றி எடுத்துரைத்தார். எண்ணெய் பிழியும் இயந்திரம், மாவு அரைக்கும் இயந்திரம் பயனாளிகளுக்கு வழங்கினார். முனைவர் சு.கண்ணன், பேராசிரியர் மற்றும் முனைவர் ஹரிசுதன், இணை பேராசிரியர், வேளாண் அறிவியர் மையம், விருத்தாசலம், தொழில்நுட்பவுரை ஆற்றினார்கள். இப்பயிற்சியில் எண்ணை பிரித்தெடுத்தல் இயந்திரம் மற்றம் உலர் தானியங்கள் அறவை இயந்திரம் பற்றி செயல்முறை விளக்கம் விவசாயிகளிடம் செய்து காண்பிக்கப்பட்டது. மேலும் தொழில்நுட்ப பயிற்சி கையேடு வெளியிடப்பட்டது. இப்பயிற்சியில் 12 குழுக்களை சேர்ந்த 60 விவசாய பயனாளிகள் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயிகளுக்கான கருத்தரங்கு நடைபெற்றது



இராமநாதபுரம், பிப்.11

மதுரை ஃபாக்ட் உர நிறுவனம் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம், இராமநாதபுரம் இணைந்து பி.எம். பிரனாம் “கிசான் சங்கோஸ்தி” திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கான கருத்தரங்கு 10.02.26 அன்று இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கை இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துறை இணை இயக்குனர் பாஸ்கரமணியன் துவக்கி வைத்து ஃபாக்ட் உரங்களின் பயன்பாடுகள் பற்றி துவக்கவுரை யாற்றினார்கள். வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.வள்ளல்கண்ணன், பி.எம்.பிரனாம் திட்டத்தின் குறிக்கோள்கள் பற்றி விவசாயி களுக்கு விவரித்தார்கள். இரத்தினகுமார், விதை மற்றும் அங்கக சான்றளிப்பு துறை, உதவி இயக்குனர், இயற்கை உரங்களின் பயன்பாடுகள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துரைத்தார்கள். வேளாண்மை அறிவியல் நிலைய இணை பேராசிரியர் முனைவர் ஜெ.ராம்குமார், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் பயிர் மேலாண்மை குறித்து தொழில்நுட்பவுரை ஆற்றினார்கள். ஃபாக்ட் உர நிறுவனத்தின் உதவி பொது மேலாளர் சிவச்சந்திரன், பயிர்களில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஃபாக்ட் உர நிறுவனத்தின் வரலாறு, உர நிறுவனம் மூலம் விற்பனை செய்யப்படும் உரங்கள் மற்றும் விவசாயிகளுக்கான சேவைகள் குறித்த விவரங்களை அளித்தார்கள்.

இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை ஃபாக்ட் நிறுவன அலுவலர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். இராமநாதபுரம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரத்தை சார்ந்த விவசாய பெருமக்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். மேலும் பசுமை விவசாயத்தை ஊக்குவிக்கும் விதமாக விவசாய பெருமக்கள் அனைவருக்கும் சணல் பை வழங்கப்பட்டது.

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

நன்றி

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

# இப்கோ நடத்திய விவசாயிகள் கருத்தரங்கம்




கோவை, பிப்.11

கோவை மாவட்டம், மீனாட்சிபுரம் கிராமத்தில் விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி மற்றும் சாகரிகா ஆகியவை 5 மில்லி அளவில் ஒரு லிட்டர் நீரில் கலந்து இலைவழி தெளிப்பு முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், இவை அனைத்து பயிர்களிலும் நன்கு செயல் படுவதாகவும் விவரித்தார்.

நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக தென்னையில் சாகரிகா திரவ உரத்தை பயன்படுத்தி வேர்வழி ஊட்டம் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிக்கும் தொழில்நுட்பம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், துல்லியமாக உரங்களை தெளிக்க கிசான் ட்ரோன் எவ்வாறு பயன்படுகிறது என்பதையும், எதிர்கால வேளாண்மையில் இது முக்கியமாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும், இப்கோ சங்கட ஹரன் பீமா யோஜனா காப்பீடு திட்டம் – நானோ உரங்கள் வாங்கும் விவசாயிகளுக்கு ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டது.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# கோவையில் சிறுதானியத் திருவிழா




கோவை, பிப்.11

இந்திய அளவில் தானியங்களில் நெல் கோதுமைக்கு அடுத்த படியாக சோளம், கம்பு, இராகி, குதிரைவாலி, வரகு போன்ற சிறுதானியங்கள் பயிரிடப்படுகிறது. தற்போது 2023ம் ஆண்டினை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டு (INTERNATIONAL YEAR OF MILLETS ) ஆக அறிவித்து சிறுதானியங்கள் உற்பத்தியை சிறு மற்றும் குறு விவசாயிகள் பெருமளவில் சாகுபடி செய்ய பல்வேறு தொழில்நுட்பங்கள் பரிந்துரைக்கப்படுகிறது. சிறுதானியங் களின் சாகுபடி மானாவாரி விவசாயத்தின் முதுகெலும்பாக உள்ளது. சோளம் மற்றும் கம்பு கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகமாக இறவை மற்றும் மானாவாரியாக பயிரிடப்படுகிறது. தற்போது தரமான சோள விதை அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு. மேலும் சிறுதானியங்களின் பயிரின் பரப்பினை அதிகரிக்கவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் சிறு தானிய விதைகள், உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவைகள் பயிர் பாதுகாப்பு மருந்துகள் விதை உற்பத்தி செய்யும் விவசாயி களுக்கு ஊக்கத்தொகை, விதைகள் விநியோகம் மானியம் வழங்கப்படுகிறது.

வேளாண்மைத் துறையில் தேசிய உணவு மற்றும் ஊட்டசத்து திட்டத்தின் கீழ்,சிறுதானிங்களின் சாகுபடியை ஊக்குவிக்கும் சிறுதானியத் திருவிழா கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அண்ணா அரங்கில் பதிவாளர் மற்றும் செயல் துணைவேந்தர் முனைவர் கா.சுப்பரமணியன் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் மீ.தமிழ்செல்வி அகியோர் துவக்கி வைத்தார். கோயம் புத்தூர் வட்டாரங்களில் உள்ள விவசாயிகளுடன் முனைவர் கி.ஐயனார், பேராசிரியர், சிறுதானியங்கள் துறை, கோமதி, முதன்மை விஞ்ஞானி, வேளாண் அறிவியல் மையம், காரமடை, இர.விஜய கல்பனா, வேளாண்மை துணைஇயக்குநர் (மா.தி), பா.மீனாம்பிகை, வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை) சு.சக்திவேல், உதவி இயக்குநர் விதை சான்று மற்றும் உயிர்மச் சான்றளிப்புத்

துறை, ஈ.நிர்மலா, வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். இந்த அரங்கில் சிறுதானியங்களில் சாகுபடி உயரிய தொழில் நுட்பங்கள், பூச்சி, நோய்கள் மேளாண்மை, பண்ணை இயந்திர மாக்கல் மற்றும் முறைகளுடன் மதிப்புக் கூட்டு முறைகள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டு கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்பட்டது.

# கண்டதேவி கிராமத்தில் கிராமப்புற மக்களின் பங்கேற்பு மதிப்பீடு (PRA) நடத்திய செட்டிநாடு வேளாண் கல்லூரி மாணவிகள்



சிவகங்கை, பிப்.11

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், கண்டதேவி கிராமத்தில் ஊரக வேளாண் அனுபவ பயிற்சியின் ஒரு பகுதியாக கிராமப்புற மக்களின் பங்கேற்பு மதிப்பீடு செட்டிநாடு வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகள் கோகுல வாணி, கிருஷ்ண வேணி, மகாலட்சுமி, மேகலா, நந்திகா தேவி, நந்தனா, பிரகதீஸ்வரி, பீரித்திகா, பிரித்திகா, கா.பிரியதர்ஷினி, நா.பிரியதர்ஷினி ஆகியோரால் நடத்தப்பட்டது.

கிராமப்புற மக்களின் பங்கேற்பு மதிப்பீடு செயல்பாட்டில் மாணவிகள் ஊர்ப் பொது மக்களிடம் விவசாயம் செய்வதில் ஏற்படும் பிரச்சனைகள், தினசரி வேலைகள், கலாச்சாரம் மற்றும் பண்பாடுகள் பற்றி மாணவிகள் கேட்டறிந்தனர். மேலும் மாணவிகள் கிராமத்தில் நேரடியாக நடந்து சென்று கிராமத்தின் அமைப்பைப் பற்றி அறிந்து கொண்டனர். இதில் ஊர்ப் பொது மக்கள் உற்சாகத்துடன் பங்கேற்று மாணவிகளுடன் கலந்துரை யாடினர். கிராமப்புற மக்களின் பங்கேற்பு மதிப்பீட்டில் கண்டதேவி கிராமத்தின் சமூக மற்றும் இயற்கை வள வரைபடம், கால வரிசை, பருவகால அட்டவணை, இயக்க வரைபடம், பிரச்சனை மரம், தினசரி வேலை கடிகாரம் போன்றவற்றை மாணவிகள் கிராமத்தின் ஒரு பகுதியில் வரைந்து கிராமப்புற மக்களுக்கு அதை பற்றி எடுத்துரைத்தனர்.

கிராமப்புற மக்களின் பங்கேற்பு மதிப்பீடானது மாணவிகளுக்கும், ஊர்ப் பொது மக்களுக்கும் ஒரு புதிய அனுபவ பயிற்சியாக இருந்தது.

# கண்டிடுவீர் பிறரகக் கலவனை! காத்திடுவீர் விதையின் தரத்தை!

விதைசான்றளிப்பு மற்றும் விதை தரக்கட்டுப்பாடு முறைகளில், விதை ஆய்வுக்கூடங்களின் பங்கு இன்றியமையாதது. வேளாண் விதை உற்பத்தியாளர், விற்பனையாளர் மற்றும் விவசாயிகளுக்கு விதையின் தரத்தை பற்றிய விவரங்களை அளிப்பதே விதைப்பரிசோதனையின் நோக்கம் ஆகும். விதைப் பரிசோதனை என்பது விதையின் தரங்களான புறத்தூய்மை, ஈரப்பபதம், முளைப்புத்திறன் மற்றும் பிற இரக விதைகளின் கலவன் போன்றவற்றை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு நல்ல தரமான விதைகள் கிடைக்கச் செய்வதே ஆகும்.

விதைகளில் பிறரக கலவன் சோதனை என்பது சமர்ப்பிக் கப்பட்ட சான்று விதைகளிலிருந்து அளவு, வடிவம் மற்றும் நிறம் போன்ற புறத்தோற்றம் பண்புகளில் வேறுபடும் விதைகளை அடையாளம் காண்பதே ஆகும். சமர்ப்பிக்கப்பட்ட சான்றுவிதை மாதிரியைப் பயன்படுத்தி, வேளாண் அலுவலர்கள் உருப் பெருக்கி மூலம் கருவிதையோடு ஒப்பிட்டு அதே ரகம் அல்லாத விதைகளைப் பிரிக்கின்றனர். சிறுதானியங்களில் சோளம், பயறுவகை பயிர்கள், எள் போன்ற விதைகளுக்கு எண்ணிக்கை யாகவும், நெல் விதைகளுக்கு சதவீதமாகவும் பரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

நெல்லில் பிறரகக் கலவனுக்கான பரிந்துரைக்கப்பட்ட வரம்பு ஆதார விதைகளுக்கு 0.05% மற்றும் சான்று விதைகளுக்கு 0.2% ஆகும். எள், சோளம், உளுந்து, துவரை, பாசிபயறு ஆகியவற்றின் ஆதார விதைகளுக்கு 10 விதைகள்/கிலோ மற்றும் சான்று விதைகளுக்கு 20 விதைகள்/கிலோவிற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

விற்பனைக்கான விதை குவியல்களை சான்றளிப்பதற்கும் விவசாயிகளுக்கு உயர்தர விதைகள் கிடைப்பதை உறுதி செய்வ தற்கும் இந்த சோதனை மிகவும் முக்கியமானது என மதுரை விதைப்பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண் அலுவலர்கள் சி.கமலாராணி மற்றும் பெரி.இராமலெட்சுமி தெரிவித்தனர்.

# மிளகாய் செடியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்துவது எப்படி?

மிளகாய் ஒரு வணிக பயிர். தென்மாவட்டங்களில் இறவை-யாகவும், மானாவாரியாகவும் பயிர் செய்யப்படுகிறது. தற்போது எங்கு பார்த்தாலும் சாறு உறிஞ்சும் பூச்சிகளால் தாக்கப்பட்டு செடிகள் வளர்ச்சி குன்றிய நிலையில் தான் உள்ளது. அதை எப்படி கட்டுப்படுத்துவது, அதன் தாக்குதல் அறிகுறிகளை எப்படி காண்பது பற்றி இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.




**சாறு உறிஞ்சும் பூச்சி என்றால் என்ன? மிளகாய் செடியில் என்னென்ன பூச்சிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தெரியுமா?**



இலை நுனிகளில் இளந்தளிரை சுற்றி அதனுடைய சாறை சுரண்டி உறிஞ்ச கூடியவை சாறு உறிஞ்சும் பூச்சிகளாகும். மிளகாய் செடியில் இலைப்பேன், (THIRPS) அசுவினி (APHIDS) மஞ்சள்நிற சிலந்தி (YELLOW MITES) யாகும்.

**தாக்குதல் அறிகுறிகள்?**

**1) இலைப்பேன் (THIRPS)**

இவைகள் துளிர் இலைகளின் சாறை உறிஞ்சுவதால் இலைகள் மேல் நோக்கி (UP WORD DIRECTION) சுருண்டு புழுப்பு நிறமாகிப் பின் உதிர்ந்து விடும். மொக்குகளும் உதிர்ந்து விடும்.

**2) அசுவினி (APHIDS)**

இவைகள் இலைகளின் அடிப்பகுதியிலும், தளிர் இலை களிலும் மஞ்சள் (அல்லது) பச்சை நிறத்தில் காணப்படும். இதனால் இலைகள் கீழ் நோக்கி (DOWN WORD DIRECTIONS) குவிந்து காணப்படும். மேலும் தேன் போன்ற கழிவு பொருட்கள் வெளியேற்றுவதால் எறும்புகள் அந்த இடங்களில் காணப்படும்.

**3) மஞ்சள் நிற சிலந்தி (YELLOW MITES)**

இலைகள் கீழ் நோக்கி சுருண்டும் சொர சொரப்பாகவும் இளகாம்புகள் நீளமாகவும் காணப்படும். பூச்சி தாக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றுவதோடு பூ மற்றும் காய்கள் உற்பத்தி தடைபடுகிறது.

**இலைப்பேன் தாக்கத்தை குறைக்க என்ன செய்ய வேண்டும்?**

1) இலை பேன் தாக்கத்தை குறைக்க ஊடுபயிராக அகத்தி பயிரிடலாம். அதனுடைய நிழலானது மிளகாய் பேன் உற்பத்தியை குறைக்க உதவும்.

மிளகாயில் ஊடுபயிராக வெங்காயம் சாகுபடி செய்யக் கூடாது. அதுமட்டுமல்ல சோளம் பயிரிட்ட இடத்தில் உடனடியாக மிளகாய் பயிரிடக்கூடாது. நாற்றுகளின் மீது தண்ணிய தெளிப்பதன் மூலமாக இலைபேன் தாக்கத்தை குறைக்கலாம்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

**விதைநேர்த்தி**

1) மிளகாய் விதைக்கு ஒரு கிலோ விதைக்கு 70% W.S 12 கிராம் இமிடா குளோபிரிட் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.


2) செடிகளில் தாக்குதலை கட்டுப்படுத்த பிப்ரோனில் 5% எஸ்.சி 1.5 மிலி/ லிட்டர் / எமாக்டின் பென்சோயேட் 5% எஸ்.சி 4கிராம்/ 10லிட்டர் கலந்து தெளிக்கலாம்.

மருந்து கரைசலை தெளிக்கும் போது பயிரில் நன்றாக ஓட்டுவதற்கு திரவ சோப்புகளான ( சாண்டோ விட், டைட்டோ வெட், ஸ்டிக்கால், இன்ட் ரான்) இவற்றில் எதாவது ஒன்றை 1.5 மிலி/ ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து ஓட்டும் திரவமாக பயன்படுத்திட வேண்டும். ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்த விட்டால், கடைசி வரை தாக்குதல் நீடிக்கும்.

இயற்கை வழி வேளாண்மையில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு/வெர்டிசியம் லக்கானி யை 10 லிட்டருக்கு 30மி.லி தெளிக்கலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



# இயற்கை பூச்சி ஈர்ப்பு மற்றும் அழிப்பு முறையின் செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.11

நாமக்கல் மாவட்டம், பி.ஜி.பி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள், காய்கறி பயிர்களில் பூச்சி தாக்குதலை இயற்கை முறையில் கட்டுப் படுத்தும் நோக்கில் இயற்கை பூச்சி ஈர்ப்பு மற்றும் அழிப்பு முறையின் செயல் விளக்கத்தை நடத்தினர். குறிப்பாக பீர்க்கங்காய், சுரைக்காய், புடலங்காய் போன்ற கொடி வகை பயிர்களில் ஏற்படும் பூச்சி சேதத்தை குறைப்பதே இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கமாகும்.

நிகழ்ச்சியில் மாணவர்கள் ஊமத்தை (Datura) செடியின் இலைகள் மற்றும் பூக்களை சேகரித்து நசுக்கி விழுதாக தயாரித்தனர். பின்னர் அதனுடன் வெல்லம் சேர்த்து நன்றாக கலக்கினர். இந்த கலவையை ஒரு பாத்திரத்தில் வைத்து வயலில் பல இடங்களில் தொங்கவிடுதல் அல்லது நிலத்தில் வைப்பது போன்ற முறைகளை அவர்கள் விளக்கினர். வெல்லத்தின் மணத்தால் பூச்சிகள் அந்த கலவைக்கு ஈர்க்கப்படுகின்றன. கலவையை உண்பதன் மூலம், ஊமத்தைச் செடியின் நச்சுத்தன்மை காரணமாக பூச்சிகள் அழிகின்றன. இதனால் பயிர்களில் நேரடியாக மருந்து தெளிக்க வேண்டிய அவசியம் குறைகிறது. இந்த முறையை ஒரு மாதத்தில் 2 முதல் 3 முறை தொடர்ந்து செய்தால், பூச்சி தாக்குதலை கணிசமாக கட்டுப்படுத்தலாம் என்று மாணவர்கள் தெரிவித்தனர். இயற்கை வளங்களை பயன்படுத்தும் இந்த நடைமுறை, குறைந்த செலவில் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாமல் பூச்சி மேலாண்மையை செய்ய உதவுகிறது. மேலும், நன்மை செய்யும் பூச்சிகளையும் பாதுகாக்கும் ஒரு பாதுகாப்பான வழியாக இது அமைகிறது என்பதையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சணப்பை பயிரில் விதை உற்பத்தி செய்வது எவ்வாறு?

சணப்பை ஒரு சிறந்த பசுந்தாள் உர பயிராகும். வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டது. களைகளை கட்டுப் படுத்துகிறது. சணப்பையை ஊடுபயிராக பயிர் செய்தால் முதன்மைப் பயிர்கள் அதிக விளைச்சலைக் கொடுக்கிறது. சணப்பை பயிரை ரமண்ணில் மடக்கி உழும் போது மண் அரிப்பினால் ஏற்படும் இழப்பை குறைக்கிறது. மண் அமைப்பை மேம்படுத்தி மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாக்கிறது. மேலும் நிலத்திற்கு தழைச்சத்தை தருகிறது. இராசயன உர அளவை குறைத்து மண் வளத்தை மேம்படுத்துகிறது.

## நிலத்தேர்வு

விதைகள் நன்கு முளைக்க வளமான நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். நிலம் தேர்வு செய்யும் போது முந்தைய பருவத்தில் வேறு ரக சணப்பை பயிரிடப்படாத நிலத்தை தேர்வு செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால், தான் தோன்றிப் பயிர்களால் ஏற்படும் இனக்கலப்பை தடுக்கலாம்.

## மண் வகை மற்றும் பருவம்

அனைத்து வகையான மண்ணிற்கும் ஏற்றது. அனைத்து பருவத்திற்கும் ஏற்றது. மார்ச் முதல் ஏப்ரல் மாதத்தில் விதை விதைப்பது விதை உற்பத்திக்கு சிறந்தது.

## விதை நேர்த்தி முறைகள்

விதைக்கும் முன், நிறம் மாறிய உடைந்த விதைகளைப் பிரித்து எடுத்துவிட வேண்டும். விதை சார்ந்த பூச்சி மற்றும் பூஞ்சாண் தாக்குதலைக் குறைத்து அதிக விளைச்சலைப் பெறுவதற்கு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பெண்டெசிம் என்ற பூஞ்சாண மருந்து கலந்து விதைக்க பயன் படுத்த வேண்டும். பூஞ்சாணக் கொல்லி விதை நேர்த்திச் செய்து, குறைந்தது ஒரு நாள் கழித்து தேவையான விதையுடன் 5 பாக்கெட் ரைசோபியம் என்ற நுண்ணுயிர் உரக் கலவையை 1 1/2 லிட்டர் ஆறிய அரிசி அல்லது மைதாக ஞ்சியுடன் கலந்து சுமார் அரை மணி நேரம் நிழலில் உலர்த்திப் பின் விதைப்பிற்குப் பயன்படுத்தலாம். ரைசோபியம் கலப்பதனால் காற்றிலுள்ள

தழைச்சத்து மண்ணில் நிலைப்படுத்தப்பட்டுப் பயிர் வளர்ச்சிக்கு உதவுகின்றது.

**விதைப்பு**

சான்று விதை உற்பத்திக்கு ஆதார விதைகளை பயன்படுத்த வேண்டும் மற்றும் 100 மீட்டர் பயிர் விலகுதூரம் அவசியம். 45ழ20 செ.மீ என்ற இடைவெளியில் விதைக்க வேண்டும். வழக்கமான நீர்ப்பாசனம், களை, உர, பயிர் பாதுகாப்பு முறைகள் செய்ய வேண்டும்.

**கலவன் அகற்றுதல்**

பூக்கும் பருவத்திற்கு முன்பு, பூக்கும் பருவம், காய் பிடிப்பின் போது, அறுவடைக்கு முன், விதைப் பயிரிலிருந்து குட்டையான செடிகள், உயரமான செடிகள், மாறுபட்ட இலை, தண்டு மற்றும் பூக்களின் நிறம் கொண்ட செடிகள், முன்னரே பூக்கும் செடிகள், மற்றும் காய்களின் தன்மையில் வேறுபட்டிருக்கும் செடிகள் ஆகியவற்றை நீக்க வேண்டும்.

**அறுவடை**

பசுந்தாள் உரப் பயிராக பயிரிட்டால் விதைத்த 45-60வது நாளில் பசுந்தாளை உழுதுவிட வேண்டும். விதைப்பயிராக பயிரிட்டால் விதைத்த 150வது நாளில் விதைகளை அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த விதைகளை உலர்த்தி வட்டக்கண் சல்லடையை பயன்படுத்தி தரமான விதைகளை பிரித்து எடுக்க வேண்டும்.

**விதைப்பரிசோதனை**

அறுவடை செய்த தரமான விதைகளை விதைப்பரிசோதனை நிலையத்தில் பரிசோதனை செய்ய வேண்டும். சணப்பு பயிரின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 80 சதவீதம் இருக்க வேண்டும். தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தூத்துக்குடி எட்டையபுரம் ரோட்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கீழ் செயல் படும் விதை பரிசோதனை ஆய்வகத்திற்கு 50 கிராம் அளவில் சணப்பு விதைகளை பரிசோதனை கட்டணமான ரூ.80/-வுடன் அனுப்பி பரிசோதனை முடிவுகளை தெரிந்து கொள்ளலாம் என திருநெல்வேலி, விதைபரிசோதனை அலுவலர் ஞா.ஆனந்தி ராதிகா மற்றும் தூத்துக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் சேக் நூஹ் ஆகியோர் தெரிவிக்கிறார்கள்.

# மின்னணு தேசிய வேளாண் சந்தை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, பிப்.11

மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி வருணா மல்லாங்கிணற்றில் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று வருகிறார். அதன் ஒரு பகுதியாக, மின்னணு தேசிய வேளாண் சந்தை (e-NAM) என்பது இந்தியாவில் உள்ள ஒழுங்குமுறைப் படுத்தப்பட்ட சந்தைகளை (Mandis) இணைக்கும் ஒரு பொதுவான ஆன்லைன் வர்த்தக தளமாகும் என்பது .குறித்து விளக்கமளித்தார்.

**நோக்கம்** : விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் வாங்குபவர்களுக்கு இடையிலான இடைத்தரகர்களைக் குறைத்து, வெளிப்படையான ஆன்லைன் ஏலம் மூலம் சிறந்த விலை கிடைப்பதை உறுதி செய்தல்.

**தமிழகத்தில் அமலாக்கம் :** தமிழக வேளாண் உற்பத்திப் பொருள் சந்தை (ஒழுங்குமுறை) சட்டம் 1987-ல் திருத்தங்கள் செய்யப்பட்டு, 3-வது கட்டமாக அக்டோபர் 2017-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

# மேம்படுத்தப்பட்ட தொழுஉரம் தயாரிப்பு குறித்த பயிற்சி



திண்டுக்கல், பிப்.11

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் ஒன்றியம், காப்பிளியபட்டி கிராமத்தில், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவர் எம்.சீனிவாசன், தனது ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE Programme) ஒரு பகுதியாக விவசாயிகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தார். இதில் மேம்படுத்தப்பட்ட தொழுஉரம் (Enriched FYM) தயாரிக்கும் முறை மற்றும் அதன் நன்மைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. சாதாரணத் தொழுஉரத்துடன் சூப்பர் பாஸ்பேட் மற்றும் நுண்ணுயிரிகளைச் சேர்த்து ஊட்டச்சத்தை அதிகரிப்பது குறித்தும், இதன் மூலம் மண்ணின் வளத்தை மேம்படுத்திப் பயிர் விளைச்சலை அதிகரிப்பது குறித்தும் விவசாயிகளுக்கு நேரடிச் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் அப்பகுதி விவசாயிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

# காளான் சாகுபடி குறித்து செய்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

சிவகங்கை, பிப்.11

சிவகங்கை மாவட்டம், செட்டிநாடு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள், தங்களின் ஊரக வேளாண்மை அனுபவ பயிற்சி திட்டத்தின் ஒரு பகுதியாக, கிராமப்புற விவசாயிகளுக்காக காளான் சாகுபடி குறித்த செய் முறை விளக்க நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தினர்.






இந்த நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய காளான் சாகுபடியை விவசாயிகளிடம் அறிமுகப்படுத்தி, அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதாகும். காளான் என்பது பூஞ்சை இனத்தைச் சேர்ந்த ஒரு உணவுப் பொருளாகும். இது பச்சை தாவரங்களைப் போல இலை, வேர், தண்டு இல்லாதது. காளான்கள் சூரிய ஒளியை பயன்படுத்தி உணவு தயாரிக்காது; மாறாக, சிதைந்த கரிமப் பொருட்களில் இருந்து தேவையான ஊட்டச்சத்துகளைப் பெறுகின்றன.

காளான் புரதம், வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் நார்ச்சத்து நிறைந்த ஒரு மிகுந்த சத்தான உணவாக கருதப்படுகிறது. கொழுப்பு மற்றும் கலோரி குறைவாக இருப்பதால், இதயம், சர்க்கரை நோயாளிகள் மற்றும் உடல் நலனில் கவனம் செலுத்துவோருக்கு ஏற்ற உணவாக உள்ளது.

**காளான்களின் வளர்ச்சி முறை**

காளான்கள் விதை மூலம் அல்ல; ஸ்பான் (Spawn) எனப்படும் பூஞ்சை விதை போன்ற நுண்ணுயிர்களின் மூலம் வளர்கின்றன. முதலில் ஸ்பான், சாகுபடி ஊடகத்தில் (substrate) வளர்ந்து, மைசீலியம் (Mycelium) எனப்படும் வெள்ளை நிற நுண்தந்துக்களை உருவாக்குகிறது. பின்னர் உகந்த வெப்பநிலை, ஈரப்பதம் கிடைத்தவுடன் காளான் குலைகள் தோன்றி, சில நாட்களில் அறுவடைக்குத் தயாராகின்றன. இந்த நிகழ்ச்சியில், மாணவிகள் விவசாயிகளுக்கு சிப்பிக் காளான் சாகுபடி முறையை விரிவாக விளக்கினர்.

**சாகுபடி முறை**

நெல் வைக்கோலை சிறு துண்டுகளாக வெட்டி, 6—8 மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பின்னர் அதை சுத்தமாக வடித்து, பாலிதீன் பைகளில் அடுக்கடுக்காக நிரப்ப வேண்டும். ஒவ்வொரு அடுக்குக்கும் ஸ்பான் தூவ வேண்டும். பைகளில் சிறிய துளைகள் போட்டு, காற்றோட்டம் உள்ள இடத்தில் தொங்கவிட வேண்டும். தினமும் தண்ணீர் தெளித்து ஈரப்பதம் பராமரிக்க வேண்டும்.

காளான் வளர்ப்புக்கு நேரடி சூரிய ஒளி தேவையில்லை, நல்ல காற்றோட்டம் அவசியம்.

அதிக மகசூல் பெற தரமான ஸ்பான் பயன்படுத்துதல், சுத்தமான மற்றும் நோய் கிருமி இல்லாத சூழ்நிலை, சரியான ஈரப்பதம் மற்றும் வெப்பநிலை பராமரிப்பு, பழைய, பூஞ்சை பாதிக்கப்பட்ட பைகளை அகற்றுதல் போன்றவற்றை பின்பற்ற வேண்டும்.

ஒரு கிலோ வைக்கோலிலிருந்து சுமார் 800 கிராம் முதல் 1 கிலோ வரை காளான் மகசூல் பெற முடியும். ஒரு பையை 2-3 முறை அறுவடை செய்யலாம்.

இந்த செய்முறை விளக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், காளான் சாகுபடி குறித்த சந்தேகங்களை கேட்டறிந்தனர். குறைந்த இடம், குறைந்த முதலீடு மற்றும் விரைவான வருமானம் கிடைப்பது காரணமாக, பல விவசாயிகள் இந்த முறையை தங்கள் இல்லங்களில் தொடங்க ஆர்வம் தெரிவித்தனர். இது கிராமப்புறங்களில் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்கி, இந்த காளான் வளர்ப்பு முறைகள் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்னை இலை மூடாக்கு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.11

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவர்கள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் மூலம் தென்னை இலை மூடாக்கு பற்றி விழிப் புணர்வு ஏற்படுத்தினர். தென்னை மரங்களில் இலை மூடாக்கு (Coconut Leaf Mulching) என்பது இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மண்ணின் ஈரப்பதம் மற்றும் வளத்தை பாதுகாக்கும் ஒரு முக்கிய மான மேலாண்மை முறையாகும். தேங்காய் மரங்களில் இருந்து கிடைக்கும் உலர்ந்த இலைகளை சேகரித்து, 1—2 அடி நீள துண்டு களாக வெட்டி, மரத்தின் தண்டு அருகில் சிறிது இடைவெளி விட்டு, 1.5—2 மீட்டர் சுற்றளவில் மண்ணின் மேற்பரப்பில் 5—10 செ.மீ பரப்புவது இம்முறையாகும். பொதுவாக மழைக்காலம் முடிந்த பின் அல்லது கோடை தொடங்கும் முன் இலை மூடாக்கு செய்வது சிறந்ததாகும்.

இந்த முறையின் முக்கிய பயன் மண்ணின் ஈரப்பதத்தை நீண்ட நாட்கள் தக்கவைத்தல் ஆகும். இலைகள் மண்ணின் மேற்பரப்பை மூடுவதால் சூரிய வெப்பத்தால் ஏற்படும் நீராவி இழப்பு குறைகிறது. இதனால் நீர் பாசனத்தின் தேவை குறைந்து, வறட்சி காலத்திலும் மரங்கள் நன்றாக வளர உதவுகிறது. மேலும், இலை மல்ல்ச்சிங் களை வளர்ச்சியை இயற்கையாக கட்டுப்படுத்தி, களைக்கொல்லி பயன்பாட்டை குறைக்கிறது.

மழைக்காலங்களில் மழைத்துளிகள் நேரடியாக மண்ணைத் தாக்காமல் தடுக்கப்படுவதால் மண் அரிப்பு குறைந்து, மண் கட்டமைப்பு பாதுகாக்கப்படுகிறது.

காலப்போக்கில் இலைகள் அழுகி கரிமப் பொருளாக (Organic matter) மாறுவதால் மண்ணின் வளம் அதிகரிக்கிறது. இதனால் மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் செயல்பாடு மேம்பட்டு, மண்ணின் தளர்வு, நீர் ஊடுருவும் திறன் மற்றும் ஊட்டச்சத்து கிடைப்புத்தன்மை அதிகரிக்கிறது. கோடைக்காலத்தில் மண்ணின் வெப்பநிலையை குறைத்து, குளிர்காலத்தில் வெப்பத்தை தக்கவைக்கும் தன்மையும் இலை மூடாக்கு இன்னொரு முக்கிய நன்மையாகும்.

எனினும், சில முன்னெச்சரிக்கைகள் அவசியம். இலைகளை நேரடியாக தண்டின் மீது அடுக்கக்கூடாது; இது பூச்சி மற்றும் நோய்கள் ஏற்பட காரணமாகலாம். மிக அதிக தடிப்பில் மூடாக்கு செய்தால் எலி போன்ற உயிரினங்கள் தங்க வாய்ப்புள்ளதால், சரியான தடிப்பை மட்டும் பின்பற்ற வேண்டும். பொதுவாக உலர்ந்த இலைகளையே பயன்படுத்த வேண்டும்; பச்சை இலைகள் பயன்படுத்தினால் சிதைவு காலத்தில் ஊட்டச்சத்து போட்டி ஏற்படலாம்.

மொத்தத்தில், தேங்காய் இலை மூடாக்கு என்பது குறைந்த செலவு, சுற்றுச்சூழல் நட்பு மற்றும் நிலைத்த வேளாண்மை முறையாக, மழை சார்ந்த மற்றும் வறட்சிப் பகுதிகளில் தேங்காய் உற்பத்தியை உயர்த்த உதவும் ஒரு பயனுள்ள தொழில்நுட்பமாகும்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# ருகோஸ் வெள்ளை ஈ பூச்சியை கட்டுப்படுத்தும் முறையை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.11

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சீப்பாலக்கோட்டை கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவி பா.கார்த்திகா, ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தென்னை மற்றும் பிற பயிர்களில் தாக்கம் ஏற்படுத்தும் ருகோஸ் வெள்ளை ஈ (Rugose Whitefly) பூச்சியை கட்டுப்படுத்த கோர்சைரா முட்டை அட்டை (Corcyra egg card) பயன்படுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் செய்முறை விளக்க நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், கோர்சைரா முட்டை அட்டைகள் மூலம் இயற்கை பகை பூச்சிகளை (பராசிட்டாய்டுகள்) பெருக்கி வெளியிடுவதால், ருகோஸ் வெள்ளை ஈயின் பெருக்கம் கட்டுப்படுத்தப் படுவதாக விளக்கப்பட்டது. இதன் மூலம் இரசாயன பூச்சிக் கொல்லிகள் பயன்பாடு குறைந்து, சுற்றுச்சூழலுக்கும் மனித ஆரோக்கியத்திற்கும் பாதுகாப்பான பூச்சி மேலாண்மை மேற்கொள்ள முடியும் என எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், கோர்சைரா முட்டை அட்டைகளை பயிர்களில் கட்டி விட வேண்டிய சரியான காலம், மரம் ஒன்றுக்கு பயன்படுத்த வேண்டிய அட்டைகளின் எண்ணிக்கை, வெளியிட வேண்டிய இடம் மற்றும் கவனிக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு எளிமையான முறையில் செய்முறை விளக்கமாக காட்டப்பட்டது.

இந்த முறையை முறையாகப் பின்பற்றுவதன் மூலம் ருகோஸ் வெள்ளை ஈயின் தாக்கம் படிப்படியாக குறைந்து, பயிர்களின் வளர்ச்சியும் மகசூலும் மேம்படும் என தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வமுடன் பயிற்சியில் பங்கேற்று, தங்களது சந்தேகங்களை கேட்டுத் தெளிவு பெற்றனர்.

# திருந்திய நெல் சாகுபடி குறித்து செயல் விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி



நாமக்கல், பிப்.11

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், துத்திக்குளம் கிராமத்தில் பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவி அருள்மொழி திருந்திய நெல் சாகுபடி குறித்து விளக்கம் அளித்தார்.

திருந்திய நெல் சாகுபடிக்கு ஒரு ஹெக்டேருக்கு 7-8 கிலோ விதை மட்டுமே போதுமானது, நாற்றங்கால் பரப்பளவு ஒரு ஹெக்டருக்கு 100 சதுர மீட்டராக குறைக்கப்படுகிறது, 14 நாட்கள் வயதுடைய 3 இலை நிலை கொண்ட நாற்றுகள் நடவு செய்ய பரிந்துரைக்கப்படுகின்றன சதுர நடவு இடைவெளி 25x25 செ.மீ ஆக நிர்ணயிக்கப்படுகிறது, மாற்று ஈரப்பதம்- உலர்தல் முறையில் பாசனம் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது,

மண்ணில் சிறிய விரிசல்கள் தோன்றிய பிறகு அதிகபட்சம் ஆழம் வரை நீரை மீண்டும் பாசனம் செய்ய வேண்டும், நடவு செய்த பிறகு 10, 20, 30 மற்றும் 40 ஆம் நாட்களில் என மொத்தம் நான்கு முறை கோனோவீடர் மூலம் களை எடுப்பு செய்ய வேண்டும், நைட்ரஜன் உரம் அளவை இலை வண்ண அட்டை மூலம் நிர்ணயிக்கலாம். மற்றும் இவற்றின் நன்மைகள் ஆன பாரம்பரிய நெல் சாகுபடி முறைகளுடன் ஒப்பீடுகளில் விதை அளவு மிகவும் குறைவாக சுமார் 10 முதல் 20 சதவீதம் மட்டுமே தேவையாகிறது அதே போல் நீர் தேவை 35 முதல் 40 சதவீதம் குறைவதாகவும் இந்த முறையில் ஒவ்வொரு நாற்றிலும் சராசரியாக 22 வரை கொத்துக்களை உருவாக்கு கிறது. SRI முறையில் சராசரி ஆக 6.20 டன் நெல் மகசூல் கிடைக்கும் என்பதை விவசாயிகளுக்கு விளக்கினார்.

# போரான் ஊட்டச்சத்து குறைபாட்டை சரி செய்யும் முறையை விளக்கிய வேளாண் மாணவி



தேனி, பிப்11

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட உ.அம்மாப்பட்டி ஊராட்சியில் இருக்கும் அம்பாசமுத்திரம் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மாணவி கே.பத்மாவதி, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் தென்னை மரங்கள் வளர்க்கும் விவசாயிகளுக்காக, போரான் ஊட்டச்சத்து குறைபாட்டை சரிசெய்யும் முறையை செயல் விளக்கமாக செய்து காட்டினார். தென்னையில் போரான் ஊட்டச்சத்து குறைபாட்டால், பிளவுபடாத இலைகள், தேங்காய் ஓடு மற்றும் உமி வெடித்தல், விளைச்சல் குறைதல் போன்ற பிரச்சனைகள் வருகின்றன. இவற்றை தவிர்க்க, தென்னைக்கு எருக்க இலை உரத்தை பயன்படுத்த வேண்டும்.

தயாரிக்கும் முறை : முதலில், களை நிலங்களில் இருந்து புதிய எருக்கு இலைகளை (அ) முழு தாவரங்களை சேகரித்து, சிறு துண்டுகளாக நறுக்கவும். தென்னையின் அடிப்பகுதியை சுற்றி தோண்டவும் (உள் 1-2 அடி ஆழம், தண்டிலிருந்து 2-3 அடி). ஒரு முதிர்ந்த மரத்திற்கு 5-10 கிலோ நறுக்கிய இலைகளை வைத்து மண்ணால் மூடவும். மழைக்காலம் (அ) முன் மழைக்காலத்தில் பயன்படுத்தவும் அல்லது மட்குவதற்கு நன்கு நீர் பாய்ச்சவும். 2-3 ஆண்டுகள் வருடந்தோறும் செய்து வந்தால் தென்னை மரங்களில் போரான் ஊட்டச்சத்து அதிகரித்து விளைச்சல் அதிகரிக்கும். இந்த முறையை விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, நேரடியாக தென்னந்தோப்பில் செய்தும் காட்டினார் வேளாண் மாணவி.

# ஆர்கானிக் முறையில் பூச்சி மேலாண்மை பற்றி மாணவிகள் செயல் விளக்கம்



நாமக்கல், பிப்.11

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் வட்டாரத்திற் குட்பட்ட பிடாரிப்பட்டியில் என்பிவி மற்றும் வேம்பு கரைசல் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து செயல் விளக்கம் அளித்தனர்.

**என்.பி.வி (Nucleo polyhedro virus) உயிரியல் பூச்சிக்கொல்லி :**

இந்த வைரஸ் ஆனது பரவி ஹெலிகோவர்பா மற்றும் ஸ்போடோப்ட்ரா போன்ற பூச்சிகளின் இளம் புழுக்களை 4-7 நாட்களுக்குள் அழித்து பயிர்களை பாதுகாக்கிறது.

**வேம்பு கரைசல் – இயற்கை பூச்சிக்கொல்லி**

இது அசாடிராக்டின் (Azadirachtin) என்ற முக்கிய வேதிப் பொருளைக் கொண்டு பூச்சிகளின் வளர்ச்சி மற்றும் இனப் பெருக்கத்தை தடுப்பதன் மூலம் பயிர்களை பாதுகாக்கிறது.

இந்த முறைகள் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்து ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மையில் (IPM) முக்கிய பங்கு வகிக்கிறது.

# விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து வேளாண் மாணவிகள் கலந்துரையாடல்



நாமக்கல், பிப்.11

பி.ஜி.பி வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு மாணவிகள், வெண்ணைமலை விவசாய சங்கத் தலைவரை சந்தித்து கலந்துரை யாடினர். இக்கலந்துரையாடலில், விவசாயிகள் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சனைகள், விவசாயத்தில் நிலவும் சவால்கள் மற்றும் அதற்கான தீர்வு வழிமுறைகள் குறித்து அவர் விரிவாக எடுத்துரைத்தார். குறிப்பாக, விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் விவசாய வளர்ச்சிக்கு தேவையான ஆதரவு குறித்து விளக்கினார்.

மேலும், இளைய தலைமுறையினரும், வேளாண் கல்லூரி மாணவர்களும் எதிர்காலத்தில் நல்ல உத்தியோகங்களில் அமர்ந்த பின்னர், விவசாயிகளின் நலனுக்காக அரசு திட்டங்கள் மற்றும் பல்வேறு உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்து, அவற்றை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் வேளாண் கல்லூரி மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

# அங்குரம் அகற்றுதல் பற்றி விளக்கிய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.11

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் தங்களது இறுதி ஆண்டு பாடத்திட்டமான கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் பிள்ளூர் கிராமத்தில் அங்குரம் அகற்றுதல் (Desuck-ering) பற்றி தெளிவாக விளக்கினார்கள். இந்த செயல் முறையில் வாழை, தென்னை, கரும்பு போன்ற பயிர்களில் தேவையற்ற அங்குரங்களை சரியான காலத்தில் அகற்றுவதின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

தாய்ச் செடியிலிருந்து தேவையற்ற அங்குரங்கள் உருவாகும் போது அவை ஊட்டச்சத்து, நீர் மற்றும் சூரிய ஒளிக்கான போட்டியை அதிகரித்து, முதன்மை பயிரின் வளர்ச்சி மற்றும் மகசூலை குறைக்கும் என்பதை விளக்கினர். அதனைத் தவிர்க்க சரியான கருவிகளை பயன்படுத்தி, சரியான பருவத்தில் அங்குரங்களை அகற்றுவது அதிக மகசூலுக்கு வழிவகுக்கும் என எடுத்துரைக்கப் பட்டது. மேலும், ஒரு பயிரில் எத்தனை அங்குரங்களை வைத்திருக்க வேண்டும், எவை அகற்றப்பட வேண்டும், இயந்திரம் மற்றும் கைக்கருவிகள் மூலம் பாதுகாப்பாக அங்குரம் அகற்றும் முறைகள் குறித்தும் விவரிக்கப்பட்டது.

# முட்டை ஒட்டுண்ணி குறித்த செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.11

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் ஜீவா.சீ, ஜெகத்பாபு.வெ, லிங்கேஷ்வரன்.சி, மெய்யரசு.ரா.பெ, ஓம் பிரகாஷ்.அ, பூவேஷ் குமார்.அ, பிரவீன் குமார்.கு, இன்று பனாமரத்துப்பட்டி தொகுதியில் உள்ள விவசாயி பிரகாஷ்-இன் வயலுக்கு சென்று அவரது நெல் வயலில் ட்ரைகோக்ராமா கைலோனிஸ் (முட்டை ஒட்டுண்ணி) பற்றிய செயல்முறை விளக்கத்தை நடத்தினார்கள். இது நெல் இலை மடிப்பு பூச்சி மற்றும் மஞ்சள் தண்டு துளைப்பான் மற்றும் நெல்லில் உள்ள வேறு சில துளைப்பான்களை கட்டுப்படுத்தும்.

**பயன்படுத்தும் முறை (செயல்முறை)**

**நெல் :** ஒரு ஏக்கருக்கு, வாரந்தோறும் 2 சிசி ட்ரைகோக்ராமா அட்டைகளை விடுவிக்கவும். நடவு செய்த 30 நாட்களுக்குப் பிறகு விடுவிக்க ஆரம்பித்து, வயலில் அட்டைகளை சீராக பொருத்தி 5 முறை விடுவிக்கவும்.

**பருத்தி :** ஒரு ஏக்கருக்கு, விதைத்த 10 நாட்களுக்குப் பிறகு ஆரம்பித்து, 15 நாள் இடைவெளியில் 1 சிசி விடுவிக்கவும். வயலில் அட்டைகளை சீராக பொருத்தி தொடர்ந்து விடுவிக்கவும்.

**காய்கறிகள், பூக்கள் மற்றும் பருப்பு வகைகள் :** ஒரு ஏக்கருக்கு, 15 நாள் இடைவெளியில் 3 சிசி விடுவிக்கவும். பயிர் வயலில் அட்டைகளை சீராக பொருத்தவும்.

**பொது முறை :** ட்ரைகோ அட்டைகளை சிறிய துண்டுகளாக வெட்டி, வயலில் உள்ள பயிர் செடிகள் அல்லது குச்சிகளில் பொருத்தவும், முன்னுரிமை அடிப்படையில் காலை அல்லது மாலை நேரங்களில்.

**முன்னெச்சரிக்கை :** ட்ரைகோக்ராமாவின் செயல்திறனை உறுதி செய்ய, விடுவிப்புக்கு முன்னும் பின்னும் குறைந்தது சில நாட்களுக்கு ரசாயன பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்த வேண்டாம்.